Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 2, Special Issue - 2, January 2023 **E-ISSN: 2583-0481**

Aatruppadai and Vedhagamam in Travelogue Perspective

L.Vinci, Assistant Professor, Department of Tamil, Bishop Heber College, Tiruchirappalli-17, Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0000-0002-9245-3474
DOI: 10.5281/zenodo.7593275

Abstract

Travel experiences serve as one of the most useful sources of history. Such travel experiences have been published in books. "Aatrupadai" and the Bible "Vedhagamam" are good examples. The forerunners of these are these "Aatrupadai" books. It is this same record of experience that the Holy Scriptures have as an authority. The purpose of this article is to examine them. The article has been written as a comparative study of the activities that took place in the middle of the scriptures.

Keywords: Aatruppadai, Vedhagamam, Travelogue Perspective

References

[1] W.C.B.H. *Paththuppattu*. New Century Book House Ltd., Cherry Road, Salem – 636001.
[2] Saiva Siddhanta Kazhagam, *Tholkaapiyam*. Saivasiddhantha Noorpathippuk Kazhagam, Chennai.
[3] Sorjojini Backkiyamuthu. *Viviliyamum Thamizhum*. Meyyappan Tamailaivagam, Chithambaram – 608001.
[4] Krishnan. A. *Tamil Panpaattiyal*. Cooperative Colony, Sri Ram Nagar, Alwarpet, Chennai – 600018.

Author Contribution Statement: NIL.
Author Acknowledgement: NIL.
Author Declaration: I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

மலர் - 2, சிறப்பிதழ் - 2, தை 2054 இ - ஐஎஸ்எஸ்எண்:2583-0481

பயண நோக்கில் ஆற்றுப்படையும் –தமிழ் வேதாகமும்

லூ. வின்சி, உதவிப்பேராசிரியர், தமிழாய்வுத் துறை,
பிஷப் ஹீபர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி- 17, தமிழ் நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0000-0002-9245-3474
DOI: 10.5281/zenodo.7593275

ஆய்வுச்சுருக்கம்

தமிழின் சங்க இலக்கிய நூலாகிய பத்துப்பாட்டில் காணப்படும் ஆற்றுப்படையில் உணவு, தொழில், வாழ்வாதாரம் சார்ந்து மக்கள் மேற்கொண்ட பயணமும், வேதாகமத்தில் இறைவனின் கட்டளைக்கு கீழ்படிந்து இஸ்ரயேல் மக்கள் மேற்கொண்ட பயணமும் வழியில் அவர்களை இறைவன் எவ்வாறு பாதுகாத்து, வழியில் இறைவனால் இஸ்ரவேல் மக்களுக்கு கொடுக்கப்பட்ட பணிகளும், அதை அவர்கள் முறைப்படி செய்ததும் அப்பயணத்தில் அவர்களுக்கு ஏற்பட்ட புதிய அனுபவமும், புதிய காரியங்களும் வெளிப்படுகிறது. அதேபோன்று, கலைஞர்கள் பொருள் வேண்டிப் பயணம் மேற்கொண்டதையும், அவர்கள் எதை நோக்கி தங்கள் பயணத்தை மேற்கொண்டனர். அதனால் அவர்களுக்கு கிடைத்த பலன் யாரால் வழிநடத்தப்பட்டனர். நடுவில் நிகழ்ந்த செயல்பாடுகள் போன்றவையும் வேதாகமம் ஆற்றுப்படைகள் இவ்விரண்டும் ஒப்பியல் ஆய்வாகக் கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

குறிப்புச் சொற்கள்: தரைவுச் செலவு, பீலிவளை, கானான், பஸ்கா நிகழ்வு, வேள், சீனாய்,

முன்னுரை

வரலாற்றை அறிய உதவக்கூடிய மூலங்களில் ஒன்றாகப் பயண அனுபவங்கள் பயன்படுகின்றன. இத்தகைய பயண அனுபவங்கள், நூல்களாக வெளிவந்துள்ளன. இவற்றின் முன்னோடியாக ஆற்றுப்படை நூல்கள் உள்ளன. இதுபோன்ற அனுபவப் பதிவைத்தான் பரிசுத்த வேதாகமம் ஒரு அதிகாரமாக கொண்டுள்ளது. அதனையும் சங்ககால ஆற்றுப்படை நூல்களையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

தமிழரின் பயணம்

- காலத்தால் முற்பட்ட பயணம் பற்றிய செய்திகளைத் தொல்காப்பியமே கூறுகின்றது. அதில் அறம், பொருள், தூது, ஓதல், பகை என்ற பிரிவு நிலைகள் அன்றைய பயணத்தின் இயல்பைத் தெரிவிக்கின்றன.
- சங்க பாடல்களிலும் பொருள்வயிற் பிரிந்த தலைவன், போர் செய்யச் சென்ற தலைவன், உடன்போக்கின் நிமித்தம் பிரிந்து செல்லுதல் போன்ற நிகழ்ச்சிகள் சுட்டப்பட்டுள்ளன.

மலர் - 2, சிறப்பிதழ் - 2, தை 2054 இ - ஐஎஸ்எஸ்எண்:2583-0481

- ஆற்றுப்படை நூல்களில் கலைஞர்கள் பொருள் வேண்டிப் பயணம் மேற்கொண்டதைச் சுட்டுகின்றன. காப்பியங்களில் இப்பயணங்கள் வாழ்க்கை, வணிகம் எனப் பல்வேறு நோக்கங்களை மையப்படுத்திய பயணமாக அமைந்தது.

ஆற்றுப்படை

ஆற்றுப்படை நூல்கள்தான் பிற்காலத்துப் பயண இலக்கியங்களுக்கு முன்னோடி ஆகும். பாடாண் திணையில் துறைகளைக் கூறும் தொல்காப்பியர்,

கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறா அர்க்கு அறிவுறீஇச்
சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும் (தொ.பொ. ப. 36)

அதாவது, வழிகாட்டுவதும், தான் பெற்ற பெருவளத்தினைப் பெறாதவர்க்கு அறிவுறுத்துவதும் ஆற்றுப்படையின் நோக்கமாகும். அதுவே, பயண இலக்கியங்களின் நோக்கமாகவும் நாம் கருதலாம். பத்துப்பாட்டில் பாதியளவிற்கு ஆற்றுப்படை நூல்களே அமைந்துள்ளதனைக் கருதும்போது அக்காலத்தில் நெடும்பயணம் மேற்கொண்ட மக்கள் பற்றி அறிய முடிகிறது. மேலும், மறைந்துபோன தகடூர் யாத்திரை, செங்கோன் தரைவுச்செலவு போன்ற நூல்களின் தலைப்புகளும் பயணம் பற்றிய சிந்தனையைத் தருகின்றது. பயண மரபு தமிழ் இனத்திற்கு மட்டுமின்றி உலகின் பல்வேறு இனத்திற்கும் தொடர்புண்டு என்பதைக் கிறித்துவ சமயத்தின் வேதமாகிய பரிசுத்த வேதாகமத்தில் பழைய ஏற்பாட்டின் இரண்டாவது நூலாகிய யாத்திராகமம் குறிப்பிடுவதன் வாயிலாக அறிய முடிகின்றது.

விவிலியத்தில் பயணம்

வேதாகமத்தின் இரண்டாவது அதிகாரமாகப் பழைய ஏற்பாட்டில் அமைந்துள்ள யாத்திராகமத்தில் உள்ள செய்திகள், ஒடுக்கப்பட்ட இஸ்ரேல் மக்கள் எகிப்து நாட்டினின்று விடுதலை பெற்றது பற்றிய வரலாற்றின் ஒரு முக்கியக் கட்டமாக உள்ளது. கடவுள் தான் அளிக்கவிருக்கும் கானான் தேசத்தை நோக்கி இஸ்ரவேல் மக்களைப் பேராற்றலோடு மேசேயின் மூலம் அழைத்துச் இஸ்ரவேல் மக்களை தம்முடைய பலத்தகரத்தினால் மோசேவைக் கொண்டு வழிநடத்துகிறார். எகிப்து தேசத்தில் இருக்கிற சீனாய் வனாந்தரம் என்ற இடத்தில் அவர்களோடு உடன்படிக்கை செய்து மோசேயின் மூலமாக இறைவனுடைய விரல்களால் எழுதப்பட்ட கற்பலகையினாலான பத்துக்கட்டளையினை வழங்கி, இஸ்ரவேல் மக்களை தம் சொந்த மக்களாக ஏற்றுக்கொள்கிறார். இதனை மீறுகிற மக்களை கண்டித்து அவர்களை நல்வழிப்படுத்துகிறார்.

பயண அனுபவப் பதிவு

பரிசில் பெற்ற ஒருவன் பெறப்போகும் ஒருவனுக்கு வள்ளலிடம் செல்லும் வழியைக் காட்டுதல் ஆற்றுப்படை ஆகும். இந்த ஆற்றுப்படை நூல்களில் இசைக்கருவிச் சிறப்பு - பெற்ற பரிசு கூறல் – வழிகாட்டல் – விருந்து உபசாரம் – கொடை ஆகிய பண்புகள் உள்ளன.

மலர் - 2, சிறப்பிதழ் - 2, தை 2054 இ - ஐஎஸ்எஸ்எண்:2583-0481

திருமுருகாற்றுப்படை

”சேயோன்மேய மைவரை உலகமும்” என்று குறிஞ்சி நிலத்தெய்வம் முருகன் என்பார் தொல்காப்பியர். அம்முருகனே இவ்ஆற்றுப்படையின் தலைவன். முருகன் குறித்த பலவித புராணக்கருத்துகளை இந்நூல் கூறுகிறது. இதற்குப் புலவராற்றுப்படை எனவும் பெயர்ப்படும். இந்நூல் முருகன் இருக்கும் ஆறுபடைகளின் அடிப்படையில் ஆறு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. முதற்பகுதி பரங்குன்றமும் அதனைச் சூழ்ந்த இயற்கை வளமும் முருகனின் திருக்கோலமும் சூரனுடன் செய்த போரும் கூறப்படுகின்றன. இரண்டாம் பகுதியில் முருகனின் ஆறு திருமுகங்களின் குறிப்பும் பன்னிரு கைகளின் சிறப்பும், சீரலைவாயின் (திருச்செந்தூர்) உயர்வும் கூறப்படுகின்றன. மூன்றாம் பகுதியில் முருகனை வழிபடும் முனிவர் பெருமையும் ஆவினன் குடியில் (பழனி) வழிபாட்டிற்கு வரும் மக்களின் இயல்பும் கூறப்படுகின்றன. நான்காம் பகுதியில் நரகத்தில் (சுவாமிமலை) முருகனை வழிபடுவோரைப் பற்றிக் கூறப்படுகிறது. ஐந்தாம் பகுதியில் மலைமக்கள் குரவையாடி முருகனை வணங்கும் முறையும் குன்றுதோராடலின் (திருத்தனி) சிறப்பும் கூறப்படுகின்றன. ஆறாம் பகுதியில் முருகன் எழுந்தருளும் இடங்களும் அவன் அருள்பெறும் முறையும் பழமுதிர்ச்சோலையின் அருவிச் சிறப்பும் கூறப்பட்டுள்ளன.

பெருநராற்றுப்படை

பெருநராற்றுப்படை இரண்டாவது ஆற்றுப்படை நூல். இதன் ஆசிரியர் முடத்தாமக் கண்ணியார். இதன் பாட்டுடைத் தலைவன் கரிகால் பெருவளத்தான். 248 அடிகளைக் கொண்ட வஞ்சியடி கலந்த ஆசிரியப்பாவால் ஆனது.

சாறு கழி வழிநாள் சோறுநடை வறாது

வேறு புலம் முன்னிய விரகளிபொருந (பொருந. 1-3)

என்று பொருநனை விளித்து ஆற்றுப்படுத்தியதால் இப்பெயர் பெற்றது. பொரு என்றால் ஒப்பு என்று பொருள், பொருள் என்றால் மற்றவர் போல் கோலம் கொள்பவள் என்பதாகும். ஏர்க்களம் பாடுவோர் , போர்க்களம் பாடுவோர் என்ற இருவகையுள் உண்டு. இவன் போர்க்களம் பாடுவோன் என்பது வெண்ணிப்பதந்தலைப் போரைச் சுட்டிப் பாடியமையால் அறியலாம்.

சிறுபாணாற்றுப்படை

ஆற்றுப்படை நூல்களில் காணப்படும் சிறுபாணாற்றுப்படை என்னும் நூலின் ஆசிரியர் இடைக்கழிநாட்டு நல்லூர் நத்தத்தனார். 269 அடிகள் கொண்ட நேரிசை ஆசிரியப்பாவால் ஆன, இந்நூலின் பாட்டுடைத் தலைவன் ஓய்மா நாட்டு நல்லியங்கோடானாவான். இவன் தன்னிடம் இரந்து வந்த மக்களுக்கு வள்ளல் தன்மையோடு வழங்கிய விதமும், இவ்வள்ளலிடம் செல்வதற்கு ஒரு பாணன் மற்றொரு பாணனை ஆற்றுப்படுத்திய விதமும் அறிய முடிகிறது.

பொன்வார்த்தன்ன புரியடங்கு நரம்பின்

இள்குரல் சீறியாழ் இடவயின் தழீஇ

மலர் - 2, சிறப்பிதழ் - 2, தை 2054 இ - ஐஎஸ்எஸ்எண்:2583-0481

முனிவிகத்து இருந்த முதுவாய் இரவல. (சி. 269)

என்று பாணனை ஆற்றுப்படுத்துவதாக அமைந்துள்ளது. மயிலுக்கு போர்வை தந்த பேகன், முல்லைக்குத் தேர் நல்லியங்கோடனைக் காண்பதற்கு, குறிஞ்சி, முல்லை, மருதம் ஆகிய நிலங்களை கடந்துச்செல்ல வேண்டுமென்று கூறும்போது அந்த நிலங்களின் சிறப்பு, மூவேந்தர்கள் பெருமை, கடையேழு வள்ளல்களாகிய பேகன், பாரி, காரி, ஓரி, அதியமான், ஆய் ஆண்டிரன், நள்ளி ஆகியோரின் பெருமைகளையும் தொகுத்து ஆசிரியர் பதிவு செய்துள்ளார். (சிறுபா.36)

கறவாப்பால்முலை கவர்தல் நோனாது

புளிற்றுராய் குதைக்கும் புல்லெள் அட்டில் (சிறு. 130-133)

என்ற அடிகள் இரவலர்களின் வறுமையைப் படமாகத் தீட்டியுள்ளன.

பெரும்பாணாற்றுப்படை

இந்நூலின் ஆசிரியர் கடியலூர் உருத்திரங் கண்ணனார் ஆவார் இந்நூலின் பாட்டுடைத் தலைவன் தொண்டைமான் இளந்திரையன் ஆவான். இவன் வெவ்வேல் கிள்ளி என்ற சோழ மன்னனுக்கும் பீலிவளை என்ற நாகக்கண்ணிக்கும் பிறந்தவன் என்று மணிமேகலை கூறுகிறது. (தமிழ் பண்பாட்டியல், 67) 500 அடிகளைக் கொண்ட ஆசிரியப்பாவால் ஆனது. "இடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழப்பி" என இதனுள் பெரியயாழ் கூறப்பட்டுள்ளதாலும் இது சிறுபாணாற்றுப்படையை விட அடி அளவில் பெரியது ஆதலாலும் இதற்குப் பெரும்பாணாற்றுப்படை என்று பெயர் ஏற்பட்டது என்பர். (விவிலியமும் தமிழும், ப.57) யாழ் வருணணை, உப்பு வணிகர், நாட்டு வழிகாப்போர் இயல்பு, எயிற்றியர், கானவர், வீரக்குடி மக்கள், முல்லை நில மக்கள், உழவர்கள், பாலை நில மக்கள் ஆகியோரின் செயல்கள், அந்தணர் ஒழுக்கம், காஞ்சிநகர் சிறப்பு, இளந்திரையன் வீரம், அரசியல், கொடைச்சிறப்பு, பாணர் விறலியர் பரிசு பெறல் ஆகியன அமைந்துள்ளன.

மலைபடுகடாம்

மலைபடுகடாம் ஆசிரியர் இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார், கூத்தராற்றுப்படை என்ற வேறு பெயரம் உண்டு. பாட்டுடைத்தலைவன் செங்கண் மாத்துவேள் நன்னன் சேய் ஒன்றன். இவன் நாட்டை 'குன்றுசூழ் இருக்கை நாடு; என்றும், இவன் குடி 'வேளிர்' குடி என்றும், இந்நூல் 'வேள்' என்றும் குறிப்பிடுவர். இவர் மலையை 'நவிரமலை' என்றும் இவன் நாட்டில் ஓடும் ஆற்றினை 'சேயாறு' என்றும் அழைப்பர். 'கரணுநர் வயா அம் கட்கின் சேயாறு' என்று குறிப்பிடுகிறது. (மலை. 47) இன்று இது செய்யாறு எனப்பெயர் மாறியுள்ளது. **மலைபடு கடாஅம் மாதிரத்து இயம்ப** (மலை. 336) என்று கௌசிகன் கூறுகின்றார் . அதாவது, யானையாக மலையை உவமித்து அதற்கண் பிறந்த ஓசையை கடாம் (மதநீர்) என்று சிறப்பித்தலால் இந்நூலுக்கு இப்பெயர் ஏற்பட்டது. ஆகுளி, எல்லரி குழல் குறும்பரந்தூம்பு, சிறுபரை, சீறியாழ், தட்டை, தண்ணுமை, துடி, தூம்பு, பன்றிப்பறை,

மலர் - 2, சிறப்பிதழ் - 2, தை 2054 இ - ஐஎஸ்எஸ்எண்:2583-0481

பாண்டில், பேரியாழ், முழவு ஆகிய இசைக்கருவிகள் கூறப்பட்டுள்ளது. (தமிழ் பண்பாட்டியல், 79)

ஆகமங்களில் காணப்படும் பயண அனுபவம்

பரிசுத்த வேதாகமம் இருபெரும் கூறுகளாக பழைய ஏற்பாடு எனவும், புதிய ஏற்பாடு எனவும் பகுக்கப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டில் 39 ஆகமங்களும், புதிய ஏற்பாட்டில் 27 ஆகமங்களும் அமைந்துள்ளன. ஆதியாகமத்தில் இஸ்ரவேல் மக்களின் வரலாற்றை மனித இனத்தின் தோற்றத்துடன் இணைத்துக் காட்டுகிறது. ஆதியாகமத்தில் இறைவன் ஆபிரகாமை அழைத்து "உன் இனத்தவரிடமிருந்து உன் தந்தை வீட்டிலிருந்து புறப்பட்டு நான் உனக்குக் காண்பிக்கும் நாட்டிற்குச் செல். உன்னை நான்பெரிய இனமாக்குவேன் என்கிறார் இந்நூல் வேதாகமத்தின் முதல்பயண ஆணையாக அமைகிறது." ஆபிரகாம் இறைவன் ஆணைப்படி தன் மனைவி சாராள், சகோதரன் லோத்து ஆகியோருடன் ஆராளை விட்டு கிளம்பி, சானான் தேசத்திற்கு சென்றனர். கானானில் உள்ள செக்கேமில் இருந்த மோரேயின் கருவாள மரத்தை அடைகிறான். அங்கிருந்து புறப்பட்டு பெத்தேலுக்குக் கிழக்கே பின்பு மேற்கே ஆயிக்குக் கிழக்குக் கூடாரம் அமைக்கிறார் அவ்வாறு ஆபிரகாம் படிப்படியாக கானான் நோக்கிப் பயணம் செய்தார் (யாத்திராகமம், 16) இப்படி நெடும் பயணத்தின் வரலாறாக வேதத்தின் அடுத்த ஆகமமான யாத்திராகமம் என்ற நூல் முழுவதும் பயணமாகவே அமைந்துள்ளது. ஒடுக்கப்பட்ட இஸ்ரவேல் மக்கள் எகிப்து நாட்டினின்று விடுதலை பெற்றது மீட்பு வரலாற்றில் மிக முக்கிய கட்டமாகும். கடவுளே முன்வந்து மக்களை அடிமைத்தனத்திலுருந்து மீட்டும் மாபெரும் "பஸ்கா நிகழ்வையே" யாத்திராகமம் விரித்துரைக்கிறது. (யாத்திராகமம், 12) அடுத்துள்ள எண்ணாகமம் இஸ்ரவேலர் சீனாய் மலையிலிருந்து புறப்பட்டு செல்லும் முன்னரும் யோர்தானுக்குக் கிழக்கே மோவாயில் மோசே செய்த கணக்கெடுப்பின் காரணமாக இந்நூல் அப்பெயர் பெற்றத. இந்நூலில் காதேசு – பர்னேயாவில் இஸ்ரயேலருக்கு நேர்ந்த இன்னல்களும் அம்மக்கள் கடவுளுக்கும் மோசேக்கும் எதிராகச் செய்த கிளர்ச்சியும் விரிவாகக் கூறியுள்ளது. பயணத்தின் தொகுப்புரையாக எண்ணிக்கை என்ற நூலில் (யாத்தி. 33, 34, 35) ஆகியவை குறிப்பிடுகின்றன. நீண்ட பயணத்தின் நடுவழியில், சீனாய் மலையருகில் இஸ்ரயேலர்களுடன் இறைவன் செய்து கொண்ட உடன்படிக்கையும் கடவுள் தந்த சட்டத்திட்டங்களும், ஆசாரிப்புக் கூடாரம், பலிபீடம், உறைவிடம், ஆசாரியர் உடை, மார்புப்பட்டை (யாத்திராகமம் 39) என்று பல்வேறு நியம விதிகளைக் கூறியுள்ளார் இவற்றையெல்லாம் நோக்கும்போது வேதகாலம் முதல் சங்க காலம் வரை மக்கள் உணவிற்காகவும் பாதுகாப்பிற்காகவும் வாழ்வாதாரத்திற்காகவும் பெரும் பயணம் மேற்கொண்டிருந்தனர் என்பது புலப்படுகின்றது.

சங்க ஆற்றுப்படை நூல்களில் பரிசில் பெறுவதற்காகவும் அருள் பெறுவதற்காகவுமான பயணப் பதிவுகள் காணப்படுகின்றன. வேதத்தில் அடிமைத்தனத்திலிருந்து விடுதலையாக்கி

மலர் - 2, சிறப்பிதழ் - 2, தை 2054 இ - ஐஎஸ்எஸ்எண்:2583-0481

இறைவன் தான் விரும்பிய இடத்தில் அவர்களைப் பாதுகாப்பாக அமர்த்தும் பொருட்டு மேற்கொண்ட பயணத்தை இதன் மூலம் காணமுடிகிறது.

குறிப்புகள்

[1] வேதாகமம்.

[2] என்.சி.பி. ஐச். *பத்துப்பாட்டு*. நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை.

[3] சைவசித்தாந்த கழகம். *தொல்காப்பியம்*. சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.

[4] சரோஜினி பாக்கியமுத்து. *விவிலியமும் தமிழும்*. மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம் – 608001.

[5] டாக்டர் அ. கிருட்டிணன். *தமிழ் பண்பாட்டியல்*.

நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி: இல்லை.

கட்டுரையாளர் நன்றியுரை: இல்லை.

கட்டுரையாளர் உறுதிமொழி: இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.